# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 12.05.2026**

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். CP 4312/F/2024**

திரு.க.பாலசுப்பிரமணியன், -- புகார்தாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
தூத்துக்குடி மாவட்டம்-628 008.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (12.05.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.க.பாலசுப்பிரமணியன்., அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திரு.மொ.சா.வாஸில் அகமது, கட்டடக்கலை உதவியாளர்/ திட்ட உதவியாளர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 11.08.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், "தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வட்டம், மீளவிட்டான் கிராமத்தில் புலஎண் 376/1A, 376/2A, 377/2. 378-1A1, 480/1A1, 481/1 ஆகிய நிலங்களை குடியிருப்பு மனைகளாக பிரித்து பின் மாற்றி திருத்தி அமைத்து தூத்துக்குடி நகர ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ம.வ.ந.ஊ.இ.எண்-737/97 என்ற எண்ணிட்டு அங்கீகரிக்கப்பட்ட உத்தரவு மற்றும் ஒட்டுமொத்த கோப்பின் (வரைபடம் உட்பட) சான்றிட்ட ஒளிநகல் வழங்கிட வேண்டுகிறேன்" என்ற தகவலை வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், தூத்துக்குடி நகர ஊரமைப்பு இயக்குநர்

அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம்-628 008 அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்காத காரணத்தால் 15.09.2024 தேதியிட்டு பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். இப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 12.05.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலரால் ந.க.எண்.2116/2024, தூமாஅ-2, நாள் 26.09.2024 மற்றும் 25.11.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்டு ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் தனக்கு பொது அதிகார அமைப்பால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு வழங்கப்பட்ட தகவல்கள் முழுமையற்ற தகவல்களாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, தனது எழுத்துமூல வாக்குமூலத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, தகவல்கள் பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் ஏற்கிறது. இருப்பினும், ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது.

- **மனுதாரரின் 11.08.2024 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுவிற்கு உரிய காலத்திற்குள் (30 தினங்களுக்குள்) தகவல்களை வழங்காததற்காக அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.செ.முருகையா, மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-2, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20 (1) மற்றும் 20(2)-ன் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு 17.06.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும் அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 4312/F/2024</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
மேற்பார்வையாளர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
தூத்துக்குடி மாவட்டம்-628 008.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர்**
**திரு.செ.முருகையா,**
**மேற்பார்வையாளர்/ வரைவாளர் நிலை-2,**
**மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,**
**தூத்துக்குடி மாவட்டம்.**

***(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)***

**<u>புகார்தாரர்</u>**

திரு.க.பாலசுப்பிரமணியன்,
எண்.9, பங்களா தெரு,
சிவந்தாகுளம்,
தூத்துக்குடி மாவட்டம்-628 003.

**<u>நகல்</u>**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

இயக்குநர்,
நகர மற்றும் கிராம திட்டமிடல் இயக்குநர் அலுவலகம்,
2வது, 3வது மற்றும் 4வது தளம்,
E&C மார்க்கெட் சாலை,
கோயம்பேடு, சென்னை-600 107.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For follow up)

Copy to: File NS/PA-